**தலைப்பு 415 – கிராமிய வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிராமிய வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் கிராமிய வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டு, வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்றும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

**(அ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்**

நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய வருமானம் அல்லாத பெறுவனவுகளை கணக்கீடு செய்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றிலுள்ள வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கீழ் ரூபா 2,005,173 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும், பரீட்சை மீதியின் படி அந்தப் பெறுமதி ரூபா 8,893,730 ஆனமையால் ரூபா 6,888,557 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ஏனைய தலைப்புகளிற்காக சேகரிக்கப்பட்ட வருமானமாக காணப்பட்டமையால் அவை நிதிக் கூற்றுக்களிற்கு கொண்டு வரப்படவில்லை. அவை குறுக்குப் பதிவின் மூலம் கிடைத்த பெறுவனவு களாக நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | பரீட்சை மீதியின் படி யான மொத்த வருமா னம் அல்லாத பெறுவன வுகள் ஏற்பாடுகளிற்க மைய நிதிச் செயலாற் றல் கூற்றில் வருமானம் அல்லாத பெறுவனவு களின் கீழ் காட்டப்ப டுதல் வேண்டும். |

## 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ACA – 6 நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் நிதி அல்லாத சொத்துக்களின் கைதவிர்ப்பின் கீழ் விற்பனையின் மூலம் ரூபா 3,219,744 தொகையும், மாற்றல்களின் மூலம் ரூபா 13,953,482 தொகையும் என மொத்தமாக ரூபா 17,173,226 உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், கைதவிர்ப்பின் மொத்தம் பெறுமதி என ரூபா 16,798,976 காண்பிக்கப் பட்டிருந்தமையால் ரூபா 374,250 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ரூபா 374,250 என்பது 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப் பட்ட இயந்திர உபகரண ங்களுடன் சம்பந்தப்பட்ட பெறுமதி ஆவதுடன், அது கைதவிர்ப்பிற்கு உரித்தான பெறுமதி அல்ல. அதன்படி, யுஊயு- 6 படிவத்தில் காட்டப்பட்டு ள்ள கைதவிர்ப்பின் பெறும தியான ரூபா 16,798,976 என்பது சரியானதாகும். | சொத்துக்களின் கைதவிர்ப்பின் கீழ் விற்பனையின் மூல மும் மாற்றல்க ளின் மூலமும் காட்டப்பட வேண் டிய சரியான தொகையை காண் பித்தல் வேண்டும். |
| (ஆ) | SA - 6 நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றின் படி 6112202 ஆம் குறியீட்டின் கீழ் ஆண்டின் போதான கணனி உபகரணங்களின் கொள்வனவு என ரூபா 300,000 காட்டப்பட்டிருந்த போதிலும், திறைசேரியின் நிதி அல்லாத சொத்து கணக்கு அறிக்கையிலுள்ள SA 82 இல் இந்தக் கொள்வனவு உள்ளடக்கப்பட் டிருக்கவில்லை. | இது 2020 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற தலைப்பு மாற்றத்தின் மூலம் சொத்துக்களை ஒப்படைத்தல் மற்றும் கையேற்றலின் போது அவற்றை கணனி நிகழ்ச்சி நிரலில் சீராக்க முடியாத தொழில்நுட்ப சிக்கல் காரணமாக ஏற்பட்ட வேறுபாடாகும். | 415 ஆம் தலைப்பு க்குரிய சொத்துக்கள் கொள்வனவு மாத்தி ரம் குறிப்பிடப்படுதல் வேண்டும். |
| (இ) | SA - 6 நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றிலுள்ள கைதவிர்ப்பின் மொத்தப் பெறுமதி ரூபா 17,173,226 ஆன போதிலும், திறைசேரியின் நிதி அல்லாத சொத்து கணக்கு அறிக்கையிலுள்ள SA 82 இல் இந்தப் பெறுமதி ரூபா 16,873,226 ஆனமையால் ரூபா 300,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இது 2020 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற தலைப்பு மாற்றத்தின் மூலம் சொத்துக்களை ஒப்படைத்தல் மற்றும் கையேற்றலின் போது அவற்றை கணனி நிகழ்ச்சி நிரலில் சீராக்க முடியாத தொழில்நுட்ப சிக்கல் காரணமாக ஏற்பட்ட வேறுபாடாகும். | நிதி அல்லாத சொத் துக்கள் கூற்றில் கைதவிர்ப்பின் சரி யான பெறுமதியை காட்டுதல் வேண்டும். |

## 1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று

### (அ) மீண்டுவரும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சினால் தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டு ள்ள காசுச் செலவினத்திற்கும் பரீட்சை மீதியின் படியான காசுச் செலவினத்திற்கும் இடையே ரூபா 1,140,650,728 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு ஐய வினாவில் பரீட்சை மீதியின் படியான பெறுமதி என இறுதி 4 மாதங்களிற்கான பெறுமதி யே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இந்தப் பெறுமதியுடன் முதல் 8 மாதங்களிற்கான பெறுமதி யும் கூட்டப்படுதல் வேண்டும். காசுப் பாய்ச்சல் கூற்றும் மொத்தம் 12 மாதங்களிற்கும் உரிய பெறுமதியை உள்ளட க்கி தயாரிக்கப்பட்டுள்ளது. | அமைச்சின் பரீட்சை மீதியின் படி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### (ஆ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சின் பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள ஏனைய தலைப்புகளிற்காக சேகரிக்கப்ப ட்ட வருமானமான ரூபா 8,893,730 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டி ருக்கவில்லை. | காசுப் பாய்ச்சல் கூற்றானது உண்மையாக பெறப்பட்ட காசுப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை அடிப்ப டையாகக் கொண்டு தயாரிக் கப்பட்டுள்ளது. அதன்படி, ஏனைய தலைப்புகளிற்காக சேகரிக்கப்பட்ட வருமானம் என கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 8,893,730 தொகை குறுக்குப் பதிவின் மூலம் பெறப்பட்ட தொகையாவ துடன் அது காசுப் புத்தகத்தின் மீதிக்கு எந்த விதத்திலும் தாக்கம் செலுத்துவதில்லை. | காசும் காசுக்கு சமமா ன அனைத்துப் பொறுவ னவுகளும் காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு எடுத்து வரப்படுதல் வேண்டும். |

**(இ) ஏனைய செலவினத் தலைப்புகளிற்காக செய்யப்பட்ட செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் பரீட்சை மீதியின் படி ஏனைய செலவினத் தலைப்புகளிற்காக செய்யப்பட்ட செலவினம் ரூபா 4,169,941,425 ஆன போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் அத்தொகை ரூபா 5,869,105,165 எனக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 1,699,163,740 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கடந்த 4 மாதங்களில், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தினால் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தலைப்பு 411க்கு வழங்கப்பட்ட 05 செலவின விடயங்கள் நி.பி. 208 இன் கீழ் நிதி ஏற்பாட்டின் மாற்றலாக எமது அமைச்சுக்கு மாற்றப்பட்டன. மேற்கூறிய செலவினங்கள் 03 இடைக்கால நிதி ஏற்பாடுகளிற்கு அமைய 123 என்ற தலைப்பின் கீழ் காணப்பட்ட போதிலும், 2020 ஆம் ஆண்டுக்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட அறிக்கையில் அந்த செலவினங்கள் தலைப்பு 411 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி, மேலே குறிப்பிடப்பட்ட செலவு விடயங்களிற்காக சனவரி முதல் ஆகஸ்ட் வரை கட்டுநிதி கணக்கு 397/20 கீழ் செய்ய ப்பட்ட அனைத்து செலவினங் களும் நிதிக் கூற்றுக்களில் ஏனைய செலவுத் தலைப்பு களில் செய்யப்பட்ட செலவின ங்களாக சேர்க்கப்பட்டுள்ளன. அதன்படி, சீராக்கல் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 5,869,105,165 பெறுமதி சரியானதாகும். | ஏனைய செலவுத் தலைப்புகளிற்காக செய்யப்பட்ட செலவினங்களின் சரியான பெறுமதிகள் காட்டப்படுதல் வேண்டும். |

**1.6.4 அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்குகள் மீதான கணக்கிணக்கக் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முற்பணக் கணக்கின் வருடாந்த கணக்கிணக்கக் கூற்றில் நி.பி. 503(1) இன் கீழ் சீராக்கல் நீக்கப்பட்ட உண்மையான பெறுமதிகளின் கீழ் குறுக்குப் பதிவின் மூலம் (12) ஆண்டில் வரவு | மீள்குடியேற்றப் பிரிவின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் அமைச்சின் | வருடாந்த கணக்கிணக்க கூற்றும் திறைசேரிக் கணனிக் குறிப்புடன் |

வைத்தலாக ரூபா 43,330,777. 427 காட்டப்பட்டிருந்த போதிலும், திணைக்களப் புத்தகம் மற்றும் திறைசேரிக் கணனிக் குறிப்புடனான இணக்கக் கூற்றில் நி.பி. 427 (1) இன் கீழ் அப் பெறுமதி ரூபா 43,446,693 ஆக இருந்ததால், ரூபா 115,916 வித்தியாசம் காணப்பட்டது.

பிரதம உள்ளக கணக்காய்வாளராக இடமாற்றம் பெற்று கடமைக்கு சமூகமளித்துள்ளதுடன், அவரது கடன் நிலுவையை திணைக்களப் புத்தகங்களுக்கு மட்டும் எடுத்துள்ளமையால் இந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது என்பதனை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணைந்த கணக்கிணக்கக் கூற்றில் உள்ள குறுக்கு குறுக்குப் பதிவுகளால் (12) ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட வரவுகளும் ஒன்றை ஒன்று ஒத்திருக்க வேண்டும்.

(ஆ) திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கு பொழிப்பின் படியான ஆண்டிற்கான மொத்த வரவு வைத்தல்கள் மற்றும் செலவு வைத்தல்கள் பெறுமதிக்கும் வருடாந்த கணக்கிணக்கக் கூற்றின் படியான பெறுமதிக்கும் முற்பணக் கணக்கின் பெறுமதிக்கும் இடையே பின்வருமாறு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| விபரம் | கட்டுப்பாட்டுக் கணக்கு பொழிப்பின் படி | கணக்கிணக்கக் கூற்றின் படி | முற்பணக் கணக்கின் படி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| ------------- | -------------- | -------------- | --------------- |
| ஆண்டின் வரவு வைத்தல்கள் | 46,903,272 | 45,849,409 | 45,965,324 |
| ஆண்டின் செலவு வைத்தல்கள் | 55,680,864 | 9,574,219 | 11,279,774 |

2020.12.31 திகதிக்கான கட்டுப்பாட்டுக் கணக்கு பொழிப்பு 12 மாதங்களிற்காக தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிணக்கக் கூற்றின் படியான மீதி 04 மாதங்களிற்கானதாகும். இதுவே கணக்கிணக்கக் கூற்றின் படியான வேறுபாட்டிற்கான காரணமாகும்.

திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கு பொழிப்பின் படியும், வருடாந்த கணக்கிணக்கக் கூற்றின் படியும், முற்பணக் கணக்கின் படியும் ஆண்டிற்கான மொத்த வரவு வைத்தல்கள் மற்றும் செலவு வைத்தல்கள் ஒத்த பெறுமதியில் காணப்படுதல் வேண்டும்.

**(இ)** வருடாந்த கணக்கிணக்கக் கூற்றிலுள்ள திணைக்களப் புத்தகத்தின் படியான மீதி ரூபா 36,275,190 ஆன போதிலும், திணைக்களப் புத்தகத்தை திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளுடன் ஒப்பிடுகையில் நி.பி. 427(1) இன் படியான கூற்றிலுள்ள மீதி ரூபா 36,391,105 ஆனதுடன், முற்பணக் கணக்கின் படியான அந்த மீதி ரூபா 34,685,928 ஆகக் காணப்பட்டது.

இந்த வேறுபாடு உள்வாரி உத்தியோகத்தர்களின் இடமாற்றம் காரணமாக ஏற்பட்டுள்ளதுடன், மீள் குடியேற்ற பிரிவும் கிராமிய வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சும் ஒரே தலைப்பின் கீழ் செயற்படுவதால் உள்ளகப் புத்தகங்களில் இந்த ரூபா

வருடாந்த கணக்கிணக்கக் கூற்றிலுள்ள திணைக்களப் புத்தகத்தின் படியான மீதியும் திணைக்களப் புத்தகத்தை திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளுடன் ஒப்பிடுகையில் அந்த கூற்றிலுள்ள மீதியும் முற்பணக் கணக்கின் படியான அந்த மீதியும் ஒத்ததாகக் காண

| | | |
|---|---|---|
| | 115,915 வேறுபாடு திருத்தப்பட்டுள்ளது. | ப்படுதல் வேண்டும். |
| (ஈ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு தீர்க்கப்பட வேண்டிய ரூபா 1,705,177 கடன் மீதியானது தவறுதலாக பெறவேண்டிய மீதியாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தமையால் திறைசேரி கணனிப் பிரதியின் படியான ஆண்டிறுதி முற்பணக் கணக்கிலுள்ள மீதியைக் காட்டிலும், திணைக்கள புத்தகத்தின் படியான மீதி ரூபா 1,705,177 ஆல் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | ஒரே ஆண்டில் இரண்டு தலைப்புகளின் கீழ் கணக்கு நடவடிக்கைகளை மேற்கொள்கையில் வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 1,705,177 தொகை தவறுதலாக செலவு வைக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகள் ஒத்த தொகையில் காணப்படுதல் வேண்டும். |

### 1.6.5 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் பரீட்சை மீதியிலுள்ள வைப்புப் பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 133,352,935 ஆகவும் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 142,506,835 ஆகவும் காணப்பட்ட போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் அவை முறையே ரூபா 135,373,305 ஆகவும் ரூபா 139,604,524 ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தமையால் பெறுவனவுகள் ரூபா 2,020,370 ஆல் அதிகரித்தும் கொடுப்பனவுகள் ரூபா 2,902,311 ஆல் குறைத்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | காசாக பெறப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட தொகைகளே காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ளதுடன், குறுக்குப் பதிவுகள் அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. | ஆனைத்து வைப்புப் பணப் பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்படுதல் வேண்டும். |

### 1.6.6 முற்பணக் கணக்கு மீதி

முற்பணக் கணக்குகளின் ஆண்டிறுதி மீதிகளை கணக்கீடு செய்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திறைசேரிப் புத்தகத்தின் (SA – 52) படி முற்பணக் கணக்கின் பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 49,783,896 ஆன போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றிலுள்ள ரூபா 11,279,396 பெறுமதியானது ACA – 5 முற்பணக் கணக்கில் ரூபா 11,279,774 ஆகக் காணப்பட்டது. அதன்படி SA 52 நிதிச் செயலாற்றல் கூற்றில் | ரூபா 38,504,500 பெறுமதியானது மாற்றல் படிவத்தின் மூலம் செலவு வைக்கப்பட்டுள்ளது. | திறைசேரிப் புத்தகத்தின் (SA – 52) படி முற்பணக் கணக்கிலுள்ள பெறுவனவுகளின் பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 38,504,500 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | திறைசேரிப் புத்தகத்தின் (SA – 52) படி முற்பணக் கணக்கின் கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 84,469,824 ஆன போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றிலுள்ள அந்தப் ரூபா 45,965,324 ஆகக் காணப்பட்டமையால் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 38,504,500 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ரூபா 38,504,500 பெறுமதியானது மாற்றல் படிவத்தின் மூலம் வரவு வைக்கப்பட்டுள்ளது. | திறைசேரிப் புத்தகத் தின் (SA – 52) படி முற்பணக் கணக்கி லுள்ள கொடுப்பனவு களின் பெறுமதி நிதிச் செயலாற்றல் கூற்றிலும் காட்டப்ப டுதல் வேண்டும். |
| (இ) | அமைச்சின் பரீட்சை மீதியிலுள்ள முற்பண அறவீடுகள் ரூபா 66,181,985 ஆகவும் கொடுப்பனவுகள் ரூபா 65,372,739 ஆகவும் காணப்பட்ட போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றிலுள்ள அறவீடுகள் ரூபா 948,553 ஆகவும் கொடுப்பனவு கள் ரூபா 5,097,338 ஆகவும் காணப்பட்டமையால் காசுப் பாய்ச்சல் கூற்றிலுள்ள அறவீடு கள் ரூபா 65,233,432 ஆலும் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 60,275,401 ஆலும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | ரூபா 66,181,985 என்ற பெறுமதியினுள் 11 மற்றும் 12 ஆகிய இரண்டு வகுதிக்குட்பட்ட பெறுவனவுகள் உள்ளடங்கியுள்ள துடன், காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ள ரூபா 948,553 தொகையில் 11 வகிதிக்கு உட்பட்ட காசுப் பெறுவனவுகள் மாத்திரம் உள்ளடங்கியுள்ளது. ரூபா 65,372,739 என்ற பெறுமதி 11 மற்றும் 12 ஆகிய 2 வகுதிகளினதும் கீழ் காசுப் பாய்ச்சல் கூற்றில் உண்மையாக தாக்கம் செலுத்தக் கூடிய 11 வகுதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள முற்பணங்கள் மற்றும் கடன்களின் பெறுமதியாகும். | அனைத்து முற்பண அறவீடுகள் மற்றும் முற்பணக் கொடுப்ப னவுகளின் சரியான பெறுமதிகளே காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு கொண்டுவரப்படுதல் வேண்டும். |

### 1.6.7 கட்டுநிதி மீதி

கட்டுநிதி மீதியை கணக்கீடு செய்கையில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் பரீட்சை மீதியின் படி திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 4,441,287,445 ஆகவும் நிதிச் செயலாற்றல் கூற்றில் அப் பெறுமதி ரூபா 7,291,269,303 ஆகவும் ACA – 3 கட்டுநிதிக் கணக்கின் படி அப்பெறுமதி ரூபா 20,534,767,464 ஆகவும் காணப்பட்டது. | முதல் 8 மாதங்களுக்கு திறைசேரியிலிருந்து ரூபா 16,581,731,000 கிடைத்தது டன், அதில் ரூபா 13,836,600,000 கட்டுநிதி தலைப்புகள் 162 மற்றும் 166 இற்கு விடுவிக்கப்பட்டது. மேலும், செப்தெம்பர் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை ரூபா 4,441,289,445.07 கட்டுநிதி திறைசேரியின் மூலம் தலைப்பப 415 இற்கு வழங்கப்பட்டது. மேலும், | தலைப்பு 415 இற்குரிய கட்டுநிதி பெறுவனவுகள் மாத் திரம் நிதிச் செயலாற் றல் கூற்றில் கட்டு நிதிப் பெறுவனவு களின் கீழ் காண்பித் தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 01.09.2020 முதல் தலைப்பு 415 உடன் ஒருங்கிணைப்பட்ட மீள் குடியமர்த்தல் பிரிவுக்கு ஆண்டு முழுவதும் பெறப்பட்ட ரூபா 261,187,746 கட்டுநிதி நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் திறைசேரியின் கட்டுநிதிப் பெறுவனவாக சேர்க்கப்பட்டுள்ளது.<br><br>ACA 3 இலுள்ள கட்டுநிதிக் கூற்றானது 397/20 கட்டுநிதி கணக்குடன் தொடர்புடைய 397/20 நிதிக் கூற்றுக்கள் மற்றும் 296/20 கட்டுநிதிக் கணக்கு ஆகிய இரண்டு கணக்குகளையும் அடிப்படை யாகக் கொண்டே தயாரிக்கப் பட்டுள்ளது.<br><br>இது ஒரு எழுதுனர் அல்லது கணக்கீட்டு வழு அல்ல என்பதுடன், கடந்த ஆண்டில் இடம்பெற்ற விசேட தலைப்பு மாற்றங்கள் காரணமாக ஏற்ப ட்ட தொழில்நுட்பச் சிக்கல்க ளின் அடிப்படையிலான சிக்க லின் காரணமாக ஏற்பட்டுள்ளது என்பதனால் கணக்காய்வு வினவலில் சுட்டிக் காட்டப் பட்டுள்ள உருப்படிகளை ஒரு குறிப்பிட்ட பெறுமதியில் காண்பிக்க முடியவில்லை. | |
| (ஆ) | காசுப் பாய்ச்சல் கூற்றிலுள்ள செயற்பாட்டு நடவடிக்கைகளிலி ருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சலின் கீழ் திறைசேரி யிலிருந்து பெறப்பட்ட கட்டுநிதி தொகையாக ரூபா 4,680,455,220 காண்பிக்கப்பட வேண்டிய போதி லும், அவ்வறு காண்பிக்கப்பட்டி ருந்த பெறுமதி ரூபா 7,293,324,476 ஆகும். அதன்படி, செயற்பாட்டு நடவடிக்கைகளிலி ருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சலின் கீழ் ரூபா 2,612,869,256 தொகை கட்டுநிதி பெறுவனவுகளாக அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது. | செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை திறைசேரியிடமிருந்து கட்டுநிதியாக தலைப்பு 415 இற்கு ரூபா4,441,287,445.07 வழங்கப்பட்ள்ளது. அதன்படி, அப்போதைய தலைப்பு 123 இற்கு உரித்தாக காணப்பட்ட 397/20 கட்டுநிதி கணக்கிற்கு சனவரி முதல் ஆகஸ்ட் வரை கிடைத்திருந்த கட்டுநிதியும், பின்னர் தலைப்பு 415 இன் 397/20 கட்டுநிதி கணக்கிற்கு செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை கிடைத்திருந்த கட்டுநிதியும்,<br>மீள்குடியேற்றப் பிரிவுக்கு உரிய 296/20 கட்டுநிதி கணக்கிற்கு சனவரி முதல் | தலைப்பு 415 இற்குரிய கட்டுநிதி பெறுமதிகள் மாத் திரம் கட்டுநிதிப் பெறுவனவுகளின் கீழ் காண்பித்தல் வேண் டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆகஸ்ட் வரை கிடைத்திருந்த கட்டுநிதியும் காசுப் பாய்ச்சல் கூற்றில் கட்டுநிதி பெறுவனவுகளாக காட்டப்பட்டுள்ளது. | |
| (இ) | அமைச்சின் பரீட்சை மீதியின் படி திறைசேரிக்கு மீளளிக்கப்பட்ட கட்டுநிதித் தொகை ரூபா 235,874,291 ஆன போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 500,000 எனக் காட்டப்பட்டிருந்தமையால் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 235,374,291 குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | 397/20 கட்டுநிதி கணக்கிற்கு 162 மற்றும் 166 ஆம் தலைப்புகளின் மூலம் 31.08.2020 திகதியன்று காணப்பட்ட மீளளிக்கப்படாத கட்டுநிதி ஆகிய ரூபா 235,874,291.44 CIGAS வேலைத் திட்டத்தின் ஊடாக தீர்க்கப்படுகையில் இரண்டு தடவைகள் பதிவு செய்யப்பட்டு ள்ளமை CIGAS வேலைத்திட் டத்தின் ஊடாக திருத்தப்படுகை யில் ரூபா 235,874,291.44 தொகை திறைசேரிக்கான மீளளப்பாக பதியப்பட்டுள்ளது. ஆனால் உண்மையாக திறைசேரிக்கு மீளளிக்கப்பட்ட தொகை ரூபா 500,000/= மாத்திரமேயாகும். | அமைச்சின் பரீட்சை மீதியின் படி திறை சேரிக்கு மீளளிக்கப் பட்ட கட்டுநிதித் தொகை மாத்திரமே காசுப் பாய்ச்சல் கூற்றில் மீளளிக்கப் பட்ட தொகையாக காட்டப்படுதல் வேண் டும். |

**1.6.8 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------------------ | ---------------------------------------------- | -------------------------------- |
| **சேதங்கள் பற்றிய பதிவேடு** | | |
| அமைச்சின் வீடமைப்புப் பிரிவினால் நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய சேதங்கள் பற்றிய பதிவேடு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் பற்றிய பதிவேடு தாபனப் பிரிவில் பேணப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணம் 110 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதில் தரப்பட்டு ள்ள படிவத்தில் சேதங் கள் பற்றிய பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

அமைச்சின் கட்டுநிதி மீதிகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புகள் பின்வருமாறு முன்வைக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரிப் புத்தகம் SA – 10 இன் படி திறைசேரி நேரடியாக செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா 4,923,279,654 ஆனதுடன், அத்தொகை கொடுப்பனவாக கட்டுநிதிச் சீராக்கல் கணக்கில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், கட்டுநிதிச் சீராக்கல் கணக்கில் அத்தொகை 3,759,902,246 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 1,163,377,408 ஆல் குறைத்து பதியப்பட்டிருந்தது. | கட்டுநிதிச் சீராக்கல் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 3,759,902,246 தொகையானது தலைப்பு 415 இன் செலவின விடயங்களிற்காக திறைசேரி நேரடியாக மாவட்டச் செயலகங்களிற்கும் CIDA நிறுவனத்திற்கும் விடுவித்திருந்த கட்டுநிதித் தொகையாகும். | தலைப்பு 415 இன் செலவின விடயங்களிற்காக திறைசேரி நேரடியாக செலவிடப்பட்டுள்ள தொகைகள் கட்டுநிதிச் சீராக்கல் கணக்கில் சீராக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் செலவினத் தலைப்பின் மூலம் ஏனைய செலவினத் தலைப்புகளிற்காக செய்யப்பட்ட செலவினத் தொகை ரூபா 4,169,941,425 ஆன போதிலும், கட்டுநிதிச் சீராக்கல் கணக்கில் அத்தொகை ரூபா 5,869,105,165 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 1,699,163,740 அதிகரித்துப் பதியப்பட்டிருந்தது. | 123 ஆவது தலைப்பின் கீழ் காணப்பட்ட 05 செலவின விடயங்கள் 2020 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு அறிக்கையில் 411 ஆம் செலவினத் தலைப்பாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி சனவரி முதல் ஆகஸ்ட் வரை மேலே குறிப்பிடப்பட்ட செலவின விடயங்களிற்காக 397/20 கட்டுநிதிக் கணக்கின் கீழ் செய்யப்பட்ட அனைத்துச் செலவினமும் ஏனைய செலவினத் தலைப்புகளிற்காக செய்யப்பட்ட செலவினமாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. | தலைப்பு 415 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களிற்காக செலவிடப்பட்டுள்ள தொகைகள் கட்டுநிதிச் சீராக்கல் கணக்கில் சீராக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | அமைச்சின் பரீட்சை மீதியைக் காட்டிலும் திறைசேரியின் SA 52 இலுள்ள முற்பணப் பெறுவனவுகள் ரூபா 16,398,089 ஆல் குறைத்தும் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 19,097,085 ஆல் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தமை கட்டுநிதிச் சீராக்கல் கணக்கில் கூட்டப்பட வேண்டிய போதிலும், கட்டுநிதிச் சீராக்கல் கணக்கில் முற்பணக் கொடுப்பனவுகளாக | பரீட்சை மீதியின் படி முற்பணப் பெறுவனவுகளாகவும் முற்பணக் கொடுப்பனவுகளாகவும் காட்டப்பட்டுள்ள தொகைகளில் ஆண்டின் போது பல்வேறு தலைப்புகளிற்கும் தலைப்புகளிலிருந்தும் மாற்றல் படிவங்களின் மூலம் 415 | முற்பணப் பெறுவனவுகள் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் தொடர்பில் திறைசேரியின் SA 52 இற்கும் அமைச்சின் பரீட்சை மீதிக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 40,867,985 கூட்டப்பட்டிருந்ததுடன், முற்பணப் பெறுவனவுகளாக ரூபா 10,330,843 கழிக்கப்பட்டிருந்தது. | ஆம் தலைப்புக்கு மாற்றிய மற்றும் 415 ஆம் தலைப்பிலிருந்து மாற்றப்பட்ட தொகைகளின் கூட்டுத் தொகையாகும். இது மீதிகளை மாற்றுகின்ற போது காணப்பட்ட மீதிகளேயன்றி ஆண்டின் இறுதியில் காணப்பட்ட மீதிகளன்று. | இடையே காணப்படுகின்ற வேறுபாடுகள் கட்டுநிதிச் சீராக்கல் கணக்கில் சீராக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | அமைச்சின் பரீட்சை மீதியைக் காட்டிலும் திறைசேரியின் SA 30 இல் அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 11,605,786 வைப்புப்பண பெறுவனவுகள் கட்டுநிதிச் சீராக்கல் கணக்கில் கழிக்கப்பட வேண்டியதுடன், அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 2,451,886 வைப்புப்பண கொடுப்பனவுகள் கட்டுநிதிச் சீராக்கல் கணக்கில் கூட்டப்பட வேண்டிய போதிலும், அமைச்சால் தயாரிக்கப்பட்டிருந்த கட்டுநிதிச் சீராக்கல் கணக்கில் வைப்புப் பணமாக ரூபா 9,585,415 கழிக்கப்படுதல் என்பதாக மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தலைப்பு மாற்றம் காரணமாக 02 தலைப்புகளிற்குரிய மீதிகளை இது உள்ளடக்கியுள்ளது. அதாவது, சனவரி முதல் ஆகஸ்ட் வரை ஒரு பகுதியும் செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை இன்னுமொரு பகுதியுமாக பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. உங்களால் கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை அமைச்சின் பரீட்சை மீதியில் காணப்படுகின்ற கிடைத்த வைப்புப் பணங்களும் செலுத்திய வைப்புப் பணங்களுமாகும். சனவரி முதல் ஆகஸ்ட் வரையான தொகைகளும் கணக்காய்வு ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளிற்கு சேர்க்கப்படுதல் வேண்டும். | வைப்புப்பண பெறு வனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பில் திறைசேரியின் SA 30 இற்கும் அமைச்சின் பரீட்சை மீதிக்கும் இடையே காணப்படுகின்ற வேறுபாடுகள் கட்டுநிதிச் சீராக்கல் கணக்கில் சீராக்கப்படுதல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எதிர்வரும் ஆண்டுக்காக மதிப்பீட்டைத் தயாரிக்கையில் செலவுகளை உறுதியாகவும் தெளிவாகவும் இனங்கண்டிருக்காமை காரணமாக மீளாய்வாண்டில் 10 செலவின விடயங்களிற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 22,195,000 தொகையிலிருந்து எவ்வித செலவும் செய்யப்பட்டிருக்காததுடன் மேலும் 13 செலவின விடயங்களிற்காக | அமைச்சரின் அலுவலக நடவடிக்கைகள் 06 மாத காலத்திற்கு மாத்திரம் இடம்பெற்றிருந்தமை. Covid – 19 நிலைமை. 2019 நவம்பர் 19 ஆந் திகதிய செயற்திட்ட சுற்றறிக்கையின் மூலம் பிரயாணச் செலவு கள் | செலவுகளை தெளிவாக இனங்கண்டு தேவைக்கு ஏற்ப நிதி ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேவைக்கும் அதிகமாக 52 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. | நிறுத்தப்பட்டமை.<br>மீள்குடியமர்த்தல் பிரிவு வருடாந்தோரும் வெவ்வேறு கட்டிடங்களிற்கு இடம் பெயர்ந்தமை காரணமாக செலவு ஏற்படாமை. கட்டிட வாடகை உடன்படிக்கை 2020 பெப்ரவரியுடன் முடிவடைந்தமை. | |
| (ஆ) | ஆரம்ப செலவு மதிப்பீட்டிற்கும் திருத்திய செலவு மதிப்பீட்டிற்கும் இடையே 05 செலவின விடயங்கள் தொடர்பில் மறைப்பெறுமதி - 549 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் அசாதாரண முரண்கள் காணப்பட்டன. | கொவிட் 19 காரணமாக சகல உத்தியோகத்தர்களிற்கும் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டமை.<br><br>இறுதி 04 மாத காலத்திற்காக அமைச்சரின் அலுவலக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை.<br><br>வெளிநாட்டுப் பிரயாணங்கள் நிறுத்தப்பட்டமை.<br><br>அமைச்சு மாற்றப்பட்டமை காரணமாக எமது அமைச்சின் மூலம் செயலாற்றல் அறிக்கைகளை அச்சிட வேண்டி ஏற்பட்டமையால் மதிப்பீட்டைக் காட்டிலும் நிதி ஏற்பாடு தேவைப்பட்டமை. | அசாதாரண முரண்கள் ஏற்படாத விதத்தில் மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் 07 செலவின விடயங்களிற்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து 84 சதவீதம் முதல் 550 சதவீதம் வரையான வீச்சில் நி.பி. 66 இற்கு அமைய நிதி ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்ததுடன், அந்த செலவின விடயங்களிற்காக பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடுகளை ஒதுக்குதல் தர்க்கரீதியான செயற்பாடு அல்ல என்பது அவதானிக்கப்பட்டது. | உலகலாவிய நோய்த் தொற்று காரணமாக வெளிநாட்டுப் பிரயாணங்கள் நிறுத்தப்பட்டமை.<br><br>அமைச்சரின் அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட கனிஷ்ட ஊழியர்கள் குறைக்கப்பட்டமை.<br><br>கொவிட் 19 காரணமாக சகல உத்தியோகத்தர்களிற்கும் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டமை.<br><br>இறுதி 04 மாதங்களிற்கு அமைச்சரின் அலுவலக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை. | செலவுகளை தெளிவாக இனங்கண்டு தேவைக்கு ஏற்ப நிதி ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அமைச்சரின் அலுவலகம் 05 மாத காலம் செயற்படாமை.<br><br>புதிய செயலாற்றல் அறிக்கைகள் அச்சிடப்பட்டமை. | |

**2.3 2020 ஆம் ஆண்டுக்கான செலவுகளை அறிக்கையிடுதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சிற்காக திறைசேரியிடமிருந்து கட்டுநிதி கிடைப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் அப்போதைய அமைச்சின் கட்டுநிதி கணக்கு இலக்கத்தின் கீழ் செய்யப்பட்டிருந்தது. அந்த கட்டுநிதி கணக்கு இலக்கத்தின் கீழ் திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதி ரூபா 21,341 மில்லியன் எனக் திறைசேரி கட்டுநிதிக் கணக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், இந்த அமைச்சின் செயற்பாடுகள் 2020 செப்தெம்பர் 01 முதல் இடம்பெற்றிருந்தமையால் அத்திகதி முதல் ஆண்டின் இறுதி வரைக்கும் திறைசேரியிலிருந்து கட்டுநிதியாக ரூபா 4,444 மில்லியன் கிடைத்திருந்ததுடன், அதில் ரூபா 500,000 தொகை 2020 திசெம்பர் 31 அன்று திறைசேரிக்குச் தீக்கப்பட்டிருந்தது. | எங்கள் அமைச்சு 2020 ஆம் ஆண்டில் 02 தலைப்புகளின் கீழும் ஒரு கட்டுநிதிக் கணக்கின் கீழும் இயங் கியிருந்தது. அதன்படி, 123 ஆம் தலைப்புக்கு அப்போது காணப்பட்ட 397/20 கட்டு நிதிக் கணக்கிற்கு கிடைத்தி ருந்த திறைசேரி கட்டு நிதியும் 415 ஆம் தலைப்புக்கு செப்தெம்பர் முதல் உரித்தாகக் காணப் பட்ட 397/20 ஆம் கட்டுநிதிக் கணக்கிற்கு கிடைத்திருந்த திறைசேரி கட்டுநிதியும் ரூபா 21,341 மில்லியன் தொகையில் உள்ளடங் கியுள்ளது. மேலும், திறை சேரியினால் தவறுதலாக 397/20 கட்டுநிதி கணக்கிற்கு மேற்கொள்ளப் பட்ட ரூபா 144 மில்லியன் வரவுப் பதிவும் 397/20 கட்டுநிதி கணக்கிற்கு முதல் 08 மாதங்களில் 166 ஆம் தலைப்புக்காக கிடைத்தி ருந்த ரூபா 153 மில்லியன் கட்டுநிதியும் ரூபா 21,341 மில்லியன் தொகையில் உள்ளடங்கியுள்ளது. இது தொடர்பில் ACA 3 படிவத்தின் அடிக்குறிப்பு களில் வெளிப்படுத்தப்பட்டு ள்ளது. | இந்த அமைச்சின் தலைப்புக்கு உரித் துடைய கட்டுநிதி பெறுவனவுகள் மாத்திரம் கணக்குக ளிற்கு எடுக்கப்ப டுதல் வேண்டும். |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத் தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன், அம்மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வா றான மீளாய்வொன்று மேற்கொள்ளப்ப ட்டதற்கான அறிக்கை கணக்காய் விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் மறதி காரணமாக உரிய உறுதிப்ப டுத்தல்கள் செய்யப்படாத போதிலும், 2021 ஆம் ஆண்டில் அதனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்ட த்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக் கப்படல் வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளது.

| | அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | **அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள்**<br>(i) 2018 சனவரி 24 ஆந் திகதிய 2/2018 ஆம் இலக்க சுற்றறிக் கையின் 1 ஆம் அத்தியாயம் | பணிபுரியும் அனை த்து ஊழியர்களும் வருடாந்த செயலா ற்றல் உடன்படிக்கை களில் கைச்சாத்திடு தல் 2018 முதல் மேற்கொள்ளப்பட | முன்னதய ஆண்டுக ளில் செயலாற்றல் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருக்காமை ஏற்றுக் கொள்ளப் படுவதுடன், 2021 ஆம் ஆண்டிற்காக | பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் வருடாந்த செய லாற்றல் உடன்ப டிக்கைகளில் கைச்சாத்திடுதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டிய போதிலும், அத்தகைய செயலாற்றல் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒவ் வொரு பிரிவிலும் உள்ள அதிகாரிகள் செயலாற்றல் உடன் படிக்கைகளில் கைச்சா த்திடுவதற்கு தேவை யான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | வேண்டும். |
| | (ii) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு மீளப் பரிசோதிக்கப் பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில், அமைச்சகத்திற்குச் சொந்தமான 18 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப்பட்டதுடன், கோவிட் தொற்றுநோய் காரணமாக, அனைத்து வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரிசோதனையையும் மேற்கொள்ள முடியவில்லை. | அனைத்து வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரிசோதனையையும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| | (iii) 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2008(1) ஆம் இலக்க சுற்றறிக் கை | பிரசைகள் / சேவை நாடுநர் சாசனத்தை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரசைகள் சாசனத்தை புதுப்பிக்கும் பணிகள் 2020 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும், 2020 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த அமைச்சிற்கு மீள்குடி யேற்ற பிரிவு இணைக்கப்பட்டமை காரணமாக இந்த அமைச்சில் அந்தப் பிரிவு முறையாக நிறுவப்படும் வரை உரிய நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. அந்த பிரிவில் இருந்து தற்போது தகவல் பெறப்பட்டு பணிகள் இடம்பெற்று வருகின்றன. | பிரசைகள் சாசனத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 நவம்பர் 28 ஆந் திகதிய 07/2019 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | நி.பி. 880 இன் கீழ் பிணை வைக்க வேண்டிய அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | பிணை வைத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்கான படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், தற்போதைய சூழ்நிலையில் பிணைப் பணத்தை சம்பளத்திலிருந்து அறவிடும் நடவடிக்கையை ஆரம்பிக்க முடியவில்லை. | நி.பி. 880 இன் கீழ் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல் வேண்டும். |

## 2.6 அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்குகள் மீதான கணக்கிணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்த உத்தி யோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 99,460 கடன் மீதியின் நிலுவைக் காலம் 4 - 5 ஆண்டுகளான போதிலும், காலப்பகுப்பாய்வில் அது 1 – 2 ஆண்டுகள் எனக் காட்டப்பட்டிருந்தது டன், மேலுமொரு உத்தியோகத்தரின் ரூபா 117,690 தொகை 05 ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய ரூபா 99,460 கடன் மீதி ரூபா 5,000 வீதம் மாதா ந்தம் எம்.பி. பிரைஸ் அவர்களின் மணைவியால் செலுத்தப்படு கிறது.<br><br>2010 ஆம் ஆண்டில் பதிவி நீக்கப்பட்டுள்ள பெண் உத்தியோகத்தர் ஒருவரின் கடன் மீதியான ரூபா 117,690 தொகை எதிர்கால த்தில் அறவிடப்படும் என்ப தை தெரிவித்துக் கொள்கி ன்றேன். | அறவிட வேண்டிய கடன்களை தாம தமின்றி அறவிடு வதற்கு நடவடிக் கை எடுக்கப்பட வேண்டுமென்பது டன், அந்தக் கடன் மீதிகளிற்குரிய காலப் பகுப்பா ய்வை சரியாகத் தயாரித்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிகளை நிறைவேற்றியிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் 1000 வீட்டு உடமையாளர்களிற்கு வீடுகளிற் கான உறுதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அமைச்சின் செயன்முன்னேற்ற அறிக்கையின் படி ஆண்டின் போது ஒரு உறுதியேனும் வழங்கப்பட் டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய கொவிட் தொற்று காரணமாக நிறுவனம் தொடர்ச்சியாக மூடப்பட்டிருந்தமையால் ஊழியர்கள் சேவைக்கு வருகை தராதிருந்தமை காரணமாக இந்த நிலை உருவாகியுள்ளது. | திட்டமிடப்பட்ட பணிகளை மேற்கொள் வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்திட்டங்களை பூரணப்படுத்தாது கைவிடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீள்குடியேற்றப் பிரிவினால் அமுல்படுத்தப்பட்ட தெரிவு செய்யப்பட்ட சிறு கைத்தொழில் துறையினருக்கு அனுசரணை வழங்குவதற்காக 2020 ஆம் ஆண்டுக்கு ரூபா 104 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதன் நிதி முன்னேற்றம் 21 சதவீதமாக காணப்பட்ட | இந்த கைவசமுற்ற பட்டியல்களை தீர்ப்பதற்காக மாவட்டச் செயலகங்களுக்கு ரூபா 104 மில்லியன் நிதி விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், நாட்டில் நிலவும் கொவிட்-19 நிலைமை காரணமாக அதற்கான | நிதி முன்னேற்றத்துக்கு இணையாக பௌதீக முன்னேற்றம் அடையப் பட வேண்டுமென்ப துடன் குறித்த பணியை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| போதிலும், இத்திட்டம் தற்போது கைவிடப்பட்டுள்ளது. ஆண்டின் போது 49 தொழில்களுக்கு நிதியுதவி செய்வதற்கு திட்ட மிடப்பட்டிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 1 சதவீதம் மட்டுமேயாகும். | நேரம் போதுமானதாக இல்லை என்பதனால் இதற்கான நிதி எதுவும் திறைசேரியிடமிருந்து கிடைக்கவில்லை. இத்திட்டம் செயல்பாட்டில் இல்லாததால், மீள்குடி யேற்றப் பிரிவின் 3வது இடைக்கால நிதி ஏற்பாட்டுக் கணக்கில் இருந்து இந்தத் திட்டம் நீக்கப்பட்டுள்ளது. |

## 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ‘‘உங்களுக்கோர் வீடு நாளைய நாடு’’ வீடமைப்பு (புதிய) செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,272 மில்லியன் நிதி ஏற்பாட்டின் நிதிசார் முன்னே ற்றம் 90 சதவீதம் ஆன போதிலும், ஆண்டில் நிர்மா ணிப்பதற்கு திட்டமிடப்பட் டிருந்த 5,000 வீடுகளில் பூரணப்படுத்தப்பட்டிருந்த வீடுகளின் எண்ணிக்கை 3,950 ஆகும். அதன்படி செயற் திட்டத்தின் பௌதீக செயன் முன்னேற்றம் 79 சதவீதம் ஆகும். | ‘‘உங்களுக்கோர் வீடு நாளைய நாடு’’ வீடமை ப்பு (புதிய) செயற்திட்டம் மற்றும் ‘‘உங்களுக்கோர் வீடு நாளைய நாடு’’ வீடமைப்பு (பிற்போட்ட) செயற்திட்டம் ஆகிய இரண்டு செயற்திட்டங்களி ற்கும் நிதியளிக்கப்படு கிறது. இந்தக் கடன் உதவியின் கீழ் வழங்க ப்படும் பணத் தைப் பயன்படுத்தி வீடு களை நிர்மாணிப்பதற்கு பெரும ளவிலான ஊழியப் பங்களிப்பு வீட்டு உடமை யாளர்களிடமிருந்து எதிர் பார்க்கப்படுகின்றது. நாட்டில் ஏற்பட்டுள்ள தொற்றுநோய் நிலைமை காரணமாக, பல வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் தாமதமாகி, பெறுனர்களின் சேவைக ளைப் பெறுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதைத் தெரிவி த்துக் கொள்கிறேன். ஆதலால் பௌதீக முன்னேற்றம் குறைந்து ள்ளது என்பதை நினைவில் கொள்ளவும். | செயற்திட்டங்களின் நிதி முன்னேற்றத்துக்கு இணையாக பௌதீக முன்னேற்றம் அடையப் பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | “உங்களுக்கோர் வீடு நாளைய நாடு” வீடமைப்பு (பிற்போட்ட) செயற்திட்டத்திற்காக 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 810 மில்லியன் ஆனதுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற் திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் 70 சதவீதம் ஆன போதிலும், ஆண்டில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த 2,500 வீடுகளில் பூரணப்படுத்தப்பட்டிருந்த வீடுகளின் எண்ணிக்கை 500 ஆகும். அதன்படி செயற் திட்டத்தின் பௌதீக செயன் முன்னேற்றம் 20 சதவீதம் மட்டுமேயாகும். | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | புனித ஆரச்சிவத்த வீடமைப்பு முன்னேற்ற செயற்திட்டத் திற்காக 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 15 மில்லியன் ஆன போதிலும், ஆண்டின் போது எவ்வித செலவும் செய்யப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயல் முன்னேற்ற அறிக்கை யின் படி செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றமாக 7 சதவீதம் குறிப்பிடப்பட்டிரு ந்தது. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத் துடன் இணங்குவதுடன், 2021 ஆம் ஆண்டில் இந்த வீடமைப்புத் திட்டத்தை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய காலத்தில் செயற் திட்டங்களை நிறைவேற் றுவதற்கு ஏற்ற வகையில் திட்டங்கள் தயாரிக்கப் படுதல் வேண்டும். |

## 3.4 வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

<table>
<tr><th></th><th>கணக்காய்வு அவதானிப்பு</th><th>பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை</th><th>பரிந்துரை</th></tr>
<tr><td>(அ)</td><td>இந்தியாவின் நிதி உதவியுடன் செயற்படுத்தப்படுகின்ற வணக்கத்துக்குரிய மாதுலுவாவே சோபித வீடமைப்புச் செயற்திட்டம் 2018 இல் ஆரம்பிக்கப்பட்டு 2019 இல் பூரணப்படுத்துவதற்கு திட்மிடப்பட்டிருந்த போதிலும், தற்போது அந்த வீடமைப்புத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்திற்காக இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா 47 மில்லியன் என்பதாகவும் பௌதீக செயல் முன்னேற்றம் 30 சதவீதம் என்பதாகவும் அமைச்சின் செயலாற்றல் அறிக்கையில் குறிப்படப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.</td><td>இந்த செயற்திட்டம் ஒப்படைக்கப்பட்ட நிறுவனம் செயற்திட்ட நிபந்தனைகளை மீறியமையால் அந்த நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் பிணைமுறி இரத்துச் செய்யப்பட்டதுடன், அந்தப் பெறுமதி இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகத்தால் அறவிடப்பட்டுள்ளது. தற்போது இச் செயற்திட்டத்தை மத்திய பொறியியல் மதியுரை பணியகத்தின் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.</td><td>இலக்குகளும் பணிகளும் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்.</td></tr>
<tr><td>(ஆ)</td><td>இந்திய உதவியுடன் செயல்படுத்தப்பட்ட ஏனைய நான்கு செயற்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கையின்படி, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயல் முன்னேற்றம் பின்வருமாறு.
<table>
<tr><th>செயற்திட்டம்</th><th>செயற்திட்டக் கால எல்லை</th><th>செயற்திட்டத்தின் நிதிசார் பெறுமதி</th><th>மேற்கொள்ளப்பட்ட செலவினம்</th><th>வேலை ஆரம்பிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை</th><th>பூரணப்படுத்திய வீடுகளின் எண்ணிக்கை</th></tr>
<tr><td></td><td></td><td>ரூபா மில்லியன்</td><td>ரூபா மில்லியன்</td><td></td><td></td></tr>
<tr><td>நாடுதளுவிய மாதிரிக் கிராம செயற்திட்டம்</td><td>2017-2020</td><td>300</td><td>246</td><td>458</td><td>258</td></tr>
<tr><td>தென் மாகா</td><td>2017-</td><td>300</td><td>148</td><td>606</td><td>13</td></tr>
</table></td><td>கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் நான் உடன்படுகின்றேன். கடந்த தொற்று நோய் நிலைமைகளின் போது வீடுகளை கட்டுவதற்கு அதன் பெறுநர்களுக்கு கடினமாக இருந்ததால், இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் செய்யப்பட்ட மீளளித்தல்கள் முறையாக வழங்கப்டவில்லை. இது தொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகராலயத்துடன் கலந்து</td><td>இலக்குகளும் பணிகளும் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்.</td></tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ண மாதிரிக் கிராம செயற் திட்டம் I | 2020 | | | | | ரையாடப்பப்பட்டதுடன், தவணைப் பணத் தை திருப்பிச் செலு த்துவதற்குப் பதிலா க முற்பணத்தை வழங்கும் வகை யில் ஒப்பந்தங்கள் திருத்தப்பட்டன. அதன்படி, வீட்டு உதவி பெறுபவர்க ளுக்கு தவணை முறையில் நிதி உதவி வழங்கப் பட்டு, அதற்கேற்ப இந்த தாமதங்கள் பெரும்பாலும் குறை க்கப்படும். |
| வட மாகாண மாதிரிக் கிராம செயற் திட்டம் I | 2018-2021 | 300 | 60 | 278 | 09 | |
| தென் மாகாண மாதிரிக் கிராம செயற் திட்டம் II | 2018-2021 | 300 | 44 | 519 | - | |
| இதற்கமைய ஏறத்தாழ 03 ஆண்டுகள் கடந்த பின்னரும் செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்த்த இலக்குகள் அடையப்பட்டிருக்கவில்லை. | | | | | | |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | --------------------------------- | ---------------------- |
| (அ) | அமைச்சுக்கு சொந்தமான 09 வாகனங்கள் சமூக உட்கட்டமைபவ்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன், இந்த வாகனங்கள் இதுவரை இந்த அமைச்சுக்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | 05 வாகனங்கள் இந்த அமைச்சுக்கு மீளப் பெறப்பட்டுள்ளது. எஞ்சிய 09 வாகனங்களையும் துரிதமாக பெற்றுக் கொள்வதற்கு நடவடி க்கை எடுக்கப்படும் என்ப தனை தயவுடன் அறியத்தருகின்றேன். | இந்த வாகன ங்களை மீண் டும் அமைச்சு க்கு பெற்றுக் கொள்தல் வேண்டும். |
| (ஆ) | பொதுத் திறைசேரியின் ஊடாக நிதிக் குத்தகையின் கீழ் பெறப்பட்டிருந்த PD 9553, KX 7872 ஆம் இலக்க வாகனங்களிற்கான குத்தகைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும், இதுவரை அமைச்சுக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | PD – 9553 ஆம் இலக்க வாகனம் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் ஆலோசனை பெறப்பட்ட பின்னர் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன். KX-7822 ஆம் இலக்க வாகனத்தை எதிர்காலத் தில் கையேற்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்படும். | இந்த வாகன ங்களை மீண் டும் அமைச்சு க்கு கையேற் றல் வேண்டும். |

### 3.6 சேதங்கள் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 யூன் 12 ஆந் திகதி விபத்துக்குள்ளான JN 3634 ஆம் இலக்க வாகனத்திற்காக சாரதியிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 49,982 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 54,981.95 தொகை யில் ரூபா 5,000 அறவிடப்பட்டு ள்ளதுடன் எஞ்சிய தொகையை 10 தவணைக் கட்டணங்களில் செலுத்துவதாக உத்தியோகத்தரால் அறிவிக்கப்பட்டுள்ளது. | சாரதியிடமிருந்து அறவிடப்பட வேண் டியுள்ள தொகை யை அறவிடுதல் வேண்டும். |
| (ஆ) | 2019 சனவரி 09 ஆந் திகதி சேதத்துக்கு உள்ளான CAF 2192 ஆம் இலக்க வாகனத்திற்காக அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 7,055 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | நி.பி. 104(4) இன் பிரகாரமான விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன். விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் குறித்த ரூபா 7,055.00 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண் டியுள்ள தொகை யை அறவிடுவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 மார்ச் 19 ஆந் திகதி விபத்துக்குள்ளான KR 5428 ஆம் இலக்க வாகனத்திற்காக அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 9,049 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | நி.பி. 104(4) இன் பிரகாரமான விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன். விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் குறித்த ரூபா 9,049.00 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்பட வேண் டியுள்ள தொகை யை அறவிடுவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் பாதீட்டு பிரேரணைகளின் படி 1972 இன் 07 ஆம் இலக்க வாடகை செலுத்தும் சட்டம் இது வரை திருத்தப்படவில்லை. | மாகாண பிரதம செயலாளர் கள் மற்றும் வீடமைப்பு ஆணை யாளரிடமிருந்து இது தொடர்பில் அவதானிப்புக ளையும் பரிந்து ரைகளையும் விரைவாகப் பெற்று எஞ்சிய நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். | இந்தச் சட்டம் துரிதமாக திருத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அரசாங்க நிறுவ னங்களினால் அமைச்சின் நிரந்தர தொழில்நுட்ப குழுவின் | அங்கீகாரம் வழங்கப்பட வேண்டிய நிர்மாண ஒப்பந்த ங்களிற்காக அங்கீகாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிரந்தர தொழில்நுட்ப குழுவின் அங்கீகாரம் தாமதமின்றி வழங்கப்படு தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்த 38 நிர்மாண ஒப்பந்தங்களிற்காக 2020 இறுதி வரையிலும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | வீடமைப்பு திட்டங்களின் கீழ் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள 64 தனியார் நிலங்களை பணம் செலுத்தி கையேற்க வேண்டிய போதிலும், 2019 ஆம் ஆண்டில் 08 காணிகளிற்காக இழப்பீடு வழங்கப்பட்டிருந்தது. எஞ்சிய காணிகளிற்கான இழப்பீடுகளை செலுத்தி 56 காணிகள் இதுவரை கையேற்கப்பட்டிருக்கவில்லை. | 2020 வரை பிரதேச செயலாளர்களினால் இழப்பீடு மற்றும் இழப்பீட்டு வட்டி என்பன குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் எண்ணிக்கை 15 ஆனதுடன், துரிதமாக இந்த இழப்பீடு மற்றும் வட்டிளை செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய தரப்பினர்களிற்கு இழப்பீட்டை செலுத்தி காணிகளை கையேற்றல் வேண்டும். |
| (ஈ) | அரசாங்க தொழிற்சாலையை மறுசீரமைப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த புத்திஜீவிகளின் அறிக்கை 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயத்துடன் இணங்குவதுடன் குறித்த அறிக்கையை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | புத்திஜீவிகளின் அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து, அந்த அறிக்கையின் பரிந்துரைகளிற்கு அமைய அரசாங்க தொழிற்சாலையை மறுசீரமைத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான தேசிய மன்றத்தின் அவதானிப்புக்கள், ஆலோசனைகள் மற்றும் பிரேரணைகளிற்கு அமைய நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தை மாற்றியமைத்து நிலைபேறான அபிவிருத்திக்கான தேசிய மன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | துரிதமாக திருத்திய திட்டத்தை நிலைபேறான அபிவிருத்திக்கான தேசிய மன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்திக்கான தேசிய மன்றத்தின் அவதானிப்புக்கள், ஆலோசனைகள் மற்றும் பிரேரணைகளிற்கு அமைய நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 பொதுமக்களிற்கு சேவைகளை வழங்கதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இழப்பீட்டுத் தொகைகள் கோரப்பட்டுள்ள காணிகள் 20 ஆண்டுகளிற்கு முன்னர் கையேற்கப்பட்டு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், குறித்த காணிகளின் உரிமை யாளர்களிற்கு இழப்பீடு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | காணிகளை கையேற்றல் மிக நீண்டகால செயல்முறை யாகவும் அதற்குக் நீண்ட காலம் எடுப்பதாலும் காணிக ளின் உரிமையாளர்களிற்கு இழப்பீடு செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை அமைச்சும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் நன்கு அறிந்திருப்பதனால் கையேற்க ப்படுகின்ற காணிகளிற்கு இழப்பீட்டை செலுத்தி புதிய வீட்டு உடமையாளர்களிற்கு உறுதிகளை வழங்குவதனை துரிதப்படுத்துதவற்கு அறிவுறு த்தல் வழங்கப்பட்டுள்ளது. | இழப்பீட்டுத் தொகை கள் கோரப்பட்டுள் ளவை தொடர்பில் கவனம் செலுத்தப்ப டுதல் வேண்டும். |
| (ஆ) | தனியாருக்கும் அரசுக்கும் சொந்தமான காணிகளை கையேற்காது வீடுகள் நிர்மா ணிக்கப்பட்டு மக்கள் குடியமர் த்தப்பட்டிருந்த போதிலும், அந்த குடியிருப்பாளர்களிற்கு உறுதிகள் வழங்கப்படாமை யால் வீடுகளின் சட்டரீதியான உரிமை கிடைத்திருக்கவி ல்லை. | -மேற்படி- | வீட்டு உடமையாளர் களிற்கு உறுதிகளை வழங்குவதற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் அங்கீகரித்த பதவியணியினர் எண்ணிக்கை 343 ஆனதுடன் உள்ளபடியான எண்ணிக்கை 263 ஆகும். அதன்படி, வெற்றிடமாக உள்ள 80 வெற்றிடங்களை நிரப்புவதற்காக மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 80 வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரசாங்க சேவைகள், மாகாண சபை கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, நிர்வாக சேவை கள் பிரிவு, பொறியியல் சேவைகள் பிரிவு, திட்டமிடல் பிரிவு மற்றும் ஒருங்கிணை ந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், பல்நோக்கு அபிவி ருத்தி செயலணி ஆகியவற்று க்கு அவ்வப்போது கடிதங் கள் அனுப்பிவைக்கப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |